# பலாத்காரம் என்றால் என்ன?

**பலாத்காரம் எனப்படுவது, வீடுகளிலோ குடும்பங்களிலோ இடம்பெறும்,நேரடியாக கண்டுகொள்ள முடியாத குறித்த நபர் எந்தவொரு குடும்ப பிண்ணனியில் இருந்தாலும் வெகுவாக பாதிக்கும் ஒரு செயல்முறையாகும். ஒருவர் மற்றொரு நபரை, அதாவது வாழ்க்கைத் துணை, துணைவர் அல்லது குடும்ப உறுப்பினரைக் கையாள மற்றும் பயத்தைப் பயன்படுத்தி ஆதிக்கம் செலுத்த அல்லது கட்டாயப்படுத்த முயற்சிக்கும்போது இது இடம்பெறுகிறது.**

# பலாத்காரத்தை இனங்காணுதல்

## புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் சமூகங்கள்

## பலாத்காரம் என்பது எவ்வாறு இருக்கும்?

பலாத்காரம் என்பது வேறொருவர் மீது அதிகாரம் செலுத்துவதாகும். புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதித் தனிநபர்களைப் பொறுத்தவரையில், பின்வரும் சூழ்நிலைகள் பலாத்காரம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கக்கூடும்:

### குடிவரவு நிலை மற்றும் நாடுகடத்தப்படலாம் என்ற அச்சம்

உங்கள் வாழ்க்கைத் துணை, துணைவர் அல்லது அவரது குடும்பத்தினர் உங்கள் குடிவரவு நிலையையோ அல்லது விசாவையோ பயன்படுத்தி கட்டுப்படுத்தலை ஏற்படுத்தலாம், உங்களை நாடு கடத்துவதாக அச்சுறுத்தலாம் அல்லது ஆவணங்களை கையகப்படுத்தி வைக்கலாம். உதாரணத்திற்கு:

- உறவை முறித்து வெளியேற முயற்சித்தால் குடிவரவு அதிகாரிகள் அல்லது காவல்துறையிடம் புகார் அளிப்பதாக மிரட்டுதல்.
- உங்களை அவர்களைச் சார்ந்து வைத்திருக்கும் பொருட்டு, உங்கள் விசா ஆவணங்களை நிரப்பவோ அல்லது அது குறித்து உதவவோ மறுப்பது.

### கலாச்சார அல்லது மத எதிர்பார்ப்புகள்

உங்கள் வாழ்க்கைத் துணை, துணைவர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் உங்கள் நடத்தையையும் நீங்கள் யாருடன் பேசலாம் என்பதையும் கட்டுப்படுத்த கலாச்சார அல்லது மத நம்பிக்கைகளைப் பயன்படுத்தலாம். அவர்கள் உங்கள் மதம் அல்லது ஆன்மீக நம்பிக்கைகளைப் பின்பற்றுவதிலிருந்தும் உங்களைத் தடுக்கலாம். உதாரணத்திற்கு:

- நீங்கள் ஒரு பெண் என்பதால் "பாரம்பரிய வழியில்" செயல்பட உங்களைக் கட்டாயப்படுத்துதல்.
- மத சேவைகள் அல்லது கலாச்சாரக் கூட்டங்களுக்குச் செல்வதைத் தடுப்பது.

### நிதி சார்பு மற்றும் கட்டுப்பாடு

நிதி துஷ்பிரயோகம் என்பது உங்கள் சொந்தப் பணத்தை அணுக அனுமதிக்காதது அல்லது நீங்கள் அதை எவ்வாறு செலவிடுகிறீர்கள் என்பதைக் கட்டுப்படுத்துவது ஆகியவை அடங்கும். உதாரணத்திற்கு:

- வங்கிக் கணக்குகளைக் கண்காணித்தல், அவற்றை அணுக உங்களை அனுமதிக்காமல் இருத்தல் அல்லது உங்களுக்குத் தேவையான பொருட்களுக்குப் பணம் கொடுக்க மறுத்தல்.
- உங்கள் குடும்பத்தினரிடமிருந்து வரதட்சணை (சீதனம்) கேட்பது.
- அவர்களின் நிதி கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் திருமணத்தை முறித்துவிடுவார்கள் என்று கூறி உங்களை பயமுறுத்தல்.

### மொழி தடைகள் மற்றும் தனிமைப்படுத்தல்

உங்கள் வரையறுக்கப்பட்ட ஆங்கிலப் புலமையைப் பயன்படுத்தி, உங்கள் வாழ்க்கைத்துணை, துணைவர் அல்லது அவரது குடும்பத்தினர் உதவி பெறுவதிலிருந்தோ அல்லது உங்கள் உரிமைகளைப் புரிந்துகொள்வதிலிருந்தோ உங்களைத் தடுக்கலாம். உதாரணத்திற்கு:

- மொழி வகுப்புகளில் கலந்து கொள்வதையோ அல்லது ஆங்கிலம் பேசும் மக்களுடன் பழகுவதையோ நிறுத்துதல். இது மக்களிடம் உதவி கேட்பதைத் தடுக்கலாம்.
- உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், அண்டை வீட்டாரை நீங்கள் தொடர்பு கொள்வதையோ அல்லது பார்ப்பதையோ தடுத்து, சமூகத்தில் சேவைகளை அணுகுவதைத் தடுத்து உங்களைத் தனிமைப்படுத்துதல்.

### சட்ட அமைப்பைப் பயன்படுத்துதல்

ஆஸ்திரேலியாவில் உங்கள் சட்டப்பூர்வ உரிமைகள் பற்றி உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம், இது உங்கள் வாழ்க்கைத் துணை அல்லது துணை உங்களை கையாள அல்லது பயமுறுத்த இதைப் பயன்படுத்த வழிவகுக்கும். இதில் பின்வருவன அடங்கும்:

- உதவி பெறுவதிலிருந்தோ அல்லது உங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதிலிருந்தோ உங்களைத் தடுக்க சட்ட நடவடிக்கை எடுப்பதாக அச்சுறுத்துதல்.
- உங்கள் வரையறுக்கப்பட்ட சட்ட அறிவைப் பயன்படுத்தி ஆஸ்திரேலிய சட்டங்களைப் பற்றி உங்களிடம் பொய் கூறுவதற்குப் பயன்படுத்தல்.

**நினைவில் கொள்ளுங்கள், பலாத்காரப்படுத்தல் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகத் தோன்றலாம். ஏதேனும் சரியாகத் தெரியவில்லை என்றால், உங்களை ஆதரிக்கக்கூடிய ஒருவரைத் தொடர்புகொண்டு பேசுங்கள். அடுத்த பக்கத்தில் பலாத்காரப்படுத்தல் பற்றி நீங்கள் பேசக்கூடிய சில சேவைகள் உள்ளன.**

inTouch
Women's Legal Centre



# நீங்கள் தொடர்பு கொள்ளலாம்:

**inTouch (இன்டச்) குடும்ப வன்முறைக்கு எதிரான பல்லினக் கலாச்சார மையம்**

ஆதரவு ஊழியர்களிடம் பேச
1800 755 988 என்ற எண்ணை
அழைக்கவும்.
காலை 9:00 மணி முதல்
மாலை 5:00 மணி வரை
திங்கள் முதல் வெள்ளி
வெள்ளிவரை திறந்திருக்கும்
**www.intouch.org.au**

**பாதுகாப்பு படிமுறைகள்**

நெருக்கடி ஆதரவு, தகவல் மற்றும்
இருப்பிடத்திற்கு **1800 015 188**
என்ற எண்ணை அழைக்கவும்.
24 மணி நேரமும், வாரத்தில்
7 நாட்களும் திறந்திருக்கும்.
**www.safesteps.org.au**

**1800RESPECT**

**1800 737 732** என்ற எண்ணை
வீடு, குடும்பம் மற்றும் பாலியல்
வன்முறைசார் ஆலோசனை,
தகவல் மற்றும் ஆதரவிற்கு
அழைக்கவும்.
நேரடி இணையவழி அரட்டை
(online chat) உள்ளது
**www.1800respect.org.au**

**The Orange Door**

உங்களுக்கு அருகிலுள்ள
குடும்ப வன்முறைக்கான
உதவியைக் கண்டறியவும்.
**www.orangedoor.vic.gov.au**

# நீங்கள் என்ன செய்ய முடியும்?

துஷ்பிரயோகம் நிறைந்த சூழ்நிலையை விட்டு வெளியேறுவது கடினமாக இருக்கலாம். பயம், நிதி சிக்கல்கள், குடிவரவு சார்ந்த கவலைகள் மற்றும் பலாத்காரத்தை மேற்கொள்ளும் நபருடனான உணர்ச்சிப்பூர்வமான உறவுகள் போன்ற தடைகளை நீங்கள் எதிர்கொள்ளக்கூடும். நீங்கள் தயாராகவும் பாதுகாப்பாகவும் உணரும்போது ஆதரவைத் தேடி, வெளியேறுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது பரவாயில்லை.

## உங்கள் பாதுகாப்பிற்கான திட்டத்தை உருவாக்குங்கள்

உங்களைப் பாதுகாத்துக் கொள்ள நீங்கள் எடுக்கக்கூடிய படிகளுடன் ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். நூலகம் அல்லது சமூக மையம் போன்ற நீங்கள் செல்லக்கூடிய பாதுகாப்பான இடங்களை அடையாளம் காண்பது மற்றும் அவசர காலங்களில் தொடர்பு கொள்ள நம்பகமான நபரை வைத்திருப்பது இதில் அடங்கும். இடதுபுறத்தில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் இதைச் செய்ய உங்களுக்கு உதவக்கூடும்.

## சம்பவங்களைப் பதிவுசெய்யுங்கள்

உங்கள் உறவில் பலாத்காரம் ஏற்படும் நேரங்களைப் பதிவு செய்யுங்கள், தேதிகள், சாட்சிகள் மற்றும் வேறு ஏதேனும் குறிப்பிட்ட விவரங்கள் உட்பட.
இந்த ஆவணத்தை பாதுகாப்பான இடத்தில் மறைத்து வைக்கவும்.

## பெறுமதிமிக்க மற்றும் முக்கியமான ஆவணங்களை மறைத்து வைக்கவும்

நகைகள் போன்ற பெறுமதிமிக்க பொருட்களையும், அடையாள ஆவணங்கள் மற்றும் குடிவரவு ஆவணங்கள் போன்ற முக்கியமான ஆவணங்களையும் மறைக்க ஒரு இரகசியமான மற்றும் பாதுகாப்பான இடத்தைக் கண்டறியவும்.

## உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்

திருமணம், குடிவரவு மற்றும் வீட்டு வன்முறைச் சட்டங்கள் தொடர்பாக ஆஸ்திரேலியாவில் உங்கள் உரிமைகளைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு உதவ இலவச சட்ட சேவைகள் உள்ளன.
மேலும் தகவலுக்கு 1300 792 387 என்ற எண்ணில் சட்ட உதவியை அழைக்கவும்.

## கலாச்சார உணர்வு மிக்க சேவைகளை அணுகவும்

கலாச்சார ரீதியாக உணர்திறன் கொண்ட மற்றும் மொழிபெயர்ப்பாளர்களை வழங்கும் ஆதரவு சேவைகளைத் தேடுங்கள். இந்த சேவைகள் உங்கள் கலாச்சார பின்னணியை மதிக்கும் அதே வேளையில் உங்களுக்குத் தேவையான புரிதலையும் உதவியையும் வழங்க முடியும். பக்கத்தில் உள்ள சேவைகளின் பட்டியலைப் பாருங்கள்.

**இந்த சேவைகளில் ஏதேனும் ஒன்றிற்கு உங்களுக்கு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், 131 450 என்ற எண்ணில் TIS (மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பாளர் சேவைகள்) ஐ அழைத்து, மேலே உள்ள எண்களை அழைக்கச் சொல்லுங்கள். www.tisnational.gov.au எனும் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்**